III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.473/2019

Deposition of witness for the Defendant/DW1
Respondent solemnly by Thiru.P.Kothandaraman, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 24-06-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : S.Jambu | Village | : |
| Father's Name | : Seeyalan | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கான அதிகாரம் பெற்ற முகவர். இந்த வழக்கில் ஆஜராவதற்கு எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் என்னை இந்த வழக்கில் ஆஜராகி சாட்சியம் அளிக்க சொன்னார்களா என்றால் ஆம். இந்த வழக்கு பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் எனக்கு வழக்கறிஞர் திரு.நிசார் அகமது மூலம் தெரியும். பிரதிவாதிகள் எனக்கு எழுதி கொடுத்த அதிகாரப் பத்திரங்களின் சான்றிட்ட நகல்கள் பி.த,சா.3 மற்றும் 4 ஆக தாக்கல் செய்துள்ளேன். அவற்றின் அசல் எங்குள்ளது என்றால் பூந்தமல்லி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் முதலேற்பு வழக்கு எண்.393/2016 ல் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் நான் குடியிருந்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன என்றால் ஆம். முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளின் விலாசத்தை காண்பிப்பதற்கு ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2016 ல் இரண்டு பிரதிவாதிகளும் பதிவு அலுவலகத்திற்கு வந்த போது நான் அவர்களை பார்த்தேன். அதற்கு முன்னரும் பார்த்துள்ளேன். அதற்கு பின்னிட்டு 2017 ல் நான் அவர்களை பார்த்தேன். அதன் பின்னர் நான் அவர்களை பார்க்கவில்லை. இந்த வழக்கை நான் நடத்துவதை பற்றி பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பி.த,சா.1 மற்றும் 2, முதலேற்பு வழக்கு எண்.393/2016 ன் பிரதிவாதி தாக்கல் செய்த ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் பரிகாரமாக நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்கப்பட்டிருந்தது. அந்த வழக்கில் தற்காலிகமாக உறுத்துக்கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அந்த வழக்கு

பின்னிட்டு தள்ளுபடியான என்றால் சரிதான். அதன் பின்னர் நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கில் இரண்டு சொத்துக்கள் காண்பிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு சொத்தின் புல எண்.163/2 பி விஸ்தீரணம் 7.5 சென்ட். இன்னொரு சொத்தின் புல எண் அதே தான், விஸ்தீரணம் 7 சென்ட். பவர் பத்திரங்களில் அடங்கிய சொத்தின் விஸ்தீரணம் 14.5 சென்ட். பிரதிவாதிகள் மேற்கூறிய இரண்டு சொத்தை யாருக்கு விற்றார்கள் என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளின் பெயரில் உள்ள அசல் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதன் அசல் பத்திரங்கள் என்னிடம் உள்ளது. அவற்றை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். அந்த அசல் பத்திரத்தை பார்த்தால் தான் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். அந்த 14.5 சென்ட் சொத்திற்கு பட்டா, அடங்கல் மற்றும் சிட்டா ஆகியவை பிரதிவாதிகளின் பெயரில் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அதற்கான மனு வருவாய் துறையில் விண்ணப்பிக்கப்பட்டு அது நிலுவையில் உள்ளது. அம்மனு 2017 ல் கொடுத்தேன். 7 வருடமாக அம்மனு நிலுவையில் உள்ளது. அது போன்ற மனு எதுவும் நான் கொடுக்கவில்லை என்றும் அம்மனு நிலுவையில் உள்ளதாக நான் தவறாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் தற்காலிக உத்தரவு பெறப்பட்ட பின்னர் இந்த வழக்கு சொத்துக்களில் நான் தகராறு ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் என்னையும் வாதியையும் விசாரித்தார்கள். அவ்விசாரணையில் போலீசார் எங்கள் இருவரையும் நீதிமன்றத்திற்கு சென்று பிரச்சனையை தீர்த்துக்கொள்ள சொல்லிவிட்டார். இந்த தாவா சொத்தில் நானும் வாதியும் இந்த தாவா சொத்தில் உள்ளே செல்லக்கூடாது என்று போலீஸ் விசாரணையில் ஏற்பட்ட தீர்வை நான் 393/2016 வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.393/2016 ல் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உத்தரவை வைத்துக்கொண்டு இந்த தாவா சொத்திற்கு சென்று அங்கிருந்த காவலரை தாக்கி சுற்றுச் சுவரை உடைத்து சேதம் ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள சுற்றுச் சுவரை நானும் முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளும் சேர்ந்து கட்டினோம். முதலாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளை விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அவர்கள் வரும் பட்சத்தில் விசாரிக்க உள்ளேன். அசல் வழக்கு எண்.393/2016 ல் தற்காலிக உத்தரவு பெறப்பட்ட பின்னர் இந்த தாவா சொத்தில் ஒரு ஷெட் கட்டினேன் என்றால் அது முன்னரே கட்டப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.393/2016 தாக்கல் செய்த பின்னர் இந்த தாவா சொத்தில் மின் இணைப்பு இரண்டாம் பிரதிவாதி பாபு பெயரில்

பெறப்பட்டது. அந்த மின் இணைப்பு வீட்டு உபயோகத்திற்கா அல்லது வணிக பயன்பாட்டிற்கா என்றால் வீட்டு உபயோகத்திற்கு. அந்த மின் இணைப்பு பெறப்பட்ட சொத்தின் சர்வே எண். 163/2 பி. அந்த மின் மீட்டர் சர்வே எண்.163/2 பி –ல் உள்ளதா என்றால் ஆம். பி.த,சா.5 ல் சர்வே எண். 163/2 பி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருக்கும் போது மின் இணைப்பு வாங்கியது தவறு என்றால் சரியல்ல. அந்த வழக்கில் மின் இணைப்பு வாங்கியது தவறு என்றால் நான் தெரியாமல் சொல்லிவிட்டேன். அசல் வழக்கு எண்.393/2016 ல் இந்த வழக்கின் வாதியானவர் தேவை என்றால் விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து கொள்ளலாம் என்று கூறியுள்ளேனா என்றால் ஆம். அந்த மின் மீட்டரை அசல் வழக்கு எண்.393/2016 ன் சொத்தின் இடத்தில் வைக்கவில்லை என்றும் இந்த தாவா சொத்தில் தான் வைத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(கற்றறிந்த பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).